

வில்லிவாக்கம் திருநகர் பகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தனது எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 50 லட்சத்தில் இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்தை தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் பிரியா, எம்.எல்.ஏ. வெற்றி அழகன், பகுதி செயலாளர்கள் கூ.பி.ஜெயின், வாசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 29.03.2025 அன்று அடையார் மண்டலம், இந்திரா நகர் சென்னை தொடக்கப் பள்ளியில் கோடைகால வெப்ப அலை பாதிப்பு மற்றும் வெப்பவாத தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ் குமார், துறை உயரதிகாரிகள் டாக்டர் வி. ஜெயச்சந்திர பானு ரெட்டி, அருண் தம்புராஜ், நிலைக்குழுத் தலைவர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மரு.செல்வவிநாயகம், செந்தில், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் து.சுபாஷினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் – பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து!



திருச்சி. மார்ச் 31 –

தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு என்று இ.யூ.முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ரமலான் நோன்பு திருநாளுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் 30.04.2025 ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

ரமலான் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் அனைவருக்கும் உரித்தாகும்.

இஸ்லாமிய மார்க்கக் கடமையில் ஒன்றான நோன்பு, தனிமனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதோடு, நோன்பு மாதத்தில் ஏழைகளுக்குப் பங்கிட்டு அளிக்கும் கொடைகள் மூலம் சமுதாயத்தில் ஏழ்மை நீங்கி, அனைவரும் வளமோடு வாழ்வதற்கான வழியையும் திறந்துவிடுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நாடும் ஏடும் நானிலமும் போற்றும் திராவிட மாடல் நல்லாட்சியில் அனைத்து சமுதாய மக்களும் நோன்பை மதித்துப் போற்றி வருவதைப் பார்க்கும்போது, எல்லாரையும் மனதால் இணைக்கும் இந்தத் திராவிட மாடல் நல்லாட்சி எங்கணும் பரவ வேண்டும் என்று பிரார்த்திக்கக் கடமைப்பட்டவர்களாகி விடுகிறோம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (உறவினர்) 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் உன்னதக் கொள்கைகளை நிலைநிறுத்தும் ரமலான் நோன்புத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகள். எல்லாமும் எல்லாரும் பெற்று இனிதாக வாழ்ந்திட வாழ்த்துவோம்.

இவ்வாறு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை – நந்தனம் அரசு கலைக் கல்லூரியில்

# மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – பணி நியமன ஆணைகள் வழங்கினார்

சென்னை, மார்ச் 31 –

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் - நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் செயல்படும் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலமாக 29.03.2025 அன்று சென்னை நந்தனத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் MRF LIMITED, BRAKES INDIA PRIVATE LIMITED, RANE BRAKE LINING LTD, ZEBRONICS, TECH MAHINDRA FOUNDATION MFT, ROYAL ENFIELD, TVS SUNDARAM AUTO COMPONENTS LTD, HYUNDAI MOTOR INDIA LIMITED, WHEELS INDIA LIMITED போன்ற முன்னனி நிறுவனங்கள் உள்ளிட்ட 208 தனியார் துறை வேலையளிக்கும் நிறுவனங்களும் திறன் பயிற்சியளிக்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டனர். ஆயிரக்கணக்கான வேலைநாடுநர்கள் இம்முகாமில் பங்கேற்றதில் வேலைநாடுநர்கள் பதிவு செய்து பல்வேறு நிறுவனங்களின் நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டனர். இதில்

மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட (ஆண்கள், பெண்கள் ) வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றனர். இம்முகாமில் முதற்கட்ட நேர்முகத் தேர்வில் (ஆண்கள், பெண்கள்) நபர்கள் தேர்ச்சிபெற்று இரண்டாம் கட்ட தேர்வுக்கு தகுதி பெற்றனர். திறன் பயிற்சிக்காக வேலைநாடுநர்களும், அயல் நாட்டு வேலை வாய்ப்பிற்காக வேலைநாடுநர்களும் பதிவு செய்தனர்.

இம்முகாமில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:-

படித்து முடித்த இளைஞர்கள் தங்களுக்கு நல்ல ஊதியத்தில் பணி கிடைக்கப் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதே அவர்களது வாழ்நாள் இலட்சியமாகும் என்றும், அத்தகைய இளைஞர்களின் நலனில் பெரும் அக்கறை கொண்டு, அவர்களின் முன்னேற்றத்திற்காக முழுவீச்சில் செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின் படி, வேலைவாய்ப்பற்ற இளை ஞர்கள் தனியார்துறையில் அதிகளவில் பணிநியமனம் பெறும் வகையில் அனைத்து மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் சிறிய மற்றும் பெரிய அளவில் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

சென்னை மாநில கல்லூரியில் 22.07.2023 அன்று நடைபெற்ற சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரமாவது நபருக்கு பணிநியமன ஆணை துணை முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது எனவும் இவ்வரசு பதவியேற்றது முதல் நாளது தேதிவரை 204 பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் 1,724 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 100 சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு 3,996 மாற்றுத்திறனாளிகள் உட்பட 2,46,830 நபர்களுக்கு தனியார்துறை நிறுவனங்களில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதால், தனியார் துறையில் பணிநியமனம் பெற விரும்பும் இளைஞர்கள் இம்முகாம்களை பயன்படுத்தி வேலைவாய்ப்பு பெற்று பயனடையு மாறும், இந்த வேலை வாய்ப்பு முகாமில் கல்லூரி மாணவர்கள் பயன் பெறும் வகையில் பகுதி நேரப்பணியிடங்கள் வழங்கும் நிறுவனங்களும் பங்குபெற்றன எனவும் தெரிவித்தார்.

மேலும், சைதாப்பேட்டையில், சுமார் 484 மாணவர்கள் தங்கும் 121 அறைகள் கொண்ட M.C. இராஜா ஆண்கள் விடுதி ரூ.40 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு விரையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் மிகபிரமாண்ட மான கலையரங்கம் திறக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

இம்முகாமில் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே, சென்னை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) இர.தேவேந்திரன் அவர்கள், சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய துணை இயக்குநர் திருமதி.ம. மகேஸ்வரி அவர்கள், நந்தனம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் சி.ஜோதி வெங்கடேசுவரன் , உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மக்கள் முதல்வரின் மனிதநேய விழா: சென்னை கிழக்கு மாவட்டத்தில்

# 'அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்' ஏப். 1 முதல் 15 வரை நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 31 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் நடைபெறும் காலை உணவு வழங்கும் "அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்" 01-04-25 முதல் 15-04- 25 வரை நடைபெறும் இடங்களின் விவரங்களை அமைச்சர் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

அன்னம் தரும் அமுத கரங்கள் கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:

நாள் 1.4.25 செவ்வாய்க்கிழமை 41 ஆம் நாள் எழும்பூர் வடக்கு பகுதி இடம்: 1) வட்டம் 77 அ - சிவராவ் ரோடு, பட்டாளம் (வட்ட செயலாளர் வி. அபாய் 9884270271)

2) வட்டம் 78 ஆ அங்காளம்மன் கோயில் தெரு சூளை (வட்ட செயலாளர் நா.பாலு 9840475482)

நாள் 2.4.25 புதன்கிழமை 42 ஆம் நாள் துறைமுகம் கிழக்கு பகுதி

இடம்: 1) வட்டம் 55 ஆ அம்மன் கோயில் தெரு கோவிந்தப்பன் நாயக்கன் தெரு (வட்ட கழக செயலாளர், எஸ். புகழேந்தி 98418 83200) 2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 54 அ பி.கே.ஜி கார்டன் 4வது சந்து அண்ணா பிள்ளை தெரு (வட்ட கழக செயலாளர் பா.கதிரவன் 9884677595)

நாள் 3.4.25 வியாழக்கிழமை 43 ஆம் நாள் வில்லிவாக்கம் மேற்கு பகுதி இடம்: 1) வட்டம் 95 திரு வீதி அம்மன் கோயில் தெரு, (வட்ட கழக செயலாளர் மா.அகிலன் 8072 98 4192 ) 2) வட்டம் 94 சிட்கோ நகர் (வட்ட கழக செயலாளர் சிட்கோ சேகர் 938032 9277)

நாள் 4.4.25 வெள்ளிக்கிழமை 44 ஆம் நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி இடம்: 1) வட்டம் 70அ - பொன்னுவேல்புரம் 4வது தெரு, அயன்புரம் (வட்ட கழக செயலாளர் சந்திரசேகர்) 2) வட்டம் 68 ஆ 70 அடி சாலை S.S பார்ட்டி ஹால் அருகில் (வட்ட கழக செயலாளர் P.T.C ரவி 7358737122)

நாள் 5.4.25 சனிக்கிழமை 45 ஆம் நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி இடம்: 1) வட்டம் 84 கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில் (வட்ட கழக செயலாளர் மு விஜயகுமார் 9884679034 ) 2) வட்டம் 84 ஆ தந்தை பெரியார் நகர் 5 விளக்கு ( வட்ட கழக செயலாளர் த.வ. லால் 94448 03747)

நாள் 6.4.25 ஞாயிற்றுக்கிழமை 46 ஆம் நாள் அம்பத்தூர் தெற்கு பகுதி இடம்: 1) வட்டம் 93 பிள்ளையார் கோயில் அண்ணா சாலை சந்திப்பு பாடி குப்பம் (வட்ட கழக செயலாளர் இரா டீக்கா 8681900093) 2) வட்டம் 90 அம்பத்தூர் நகர் பாடி குப்பம் ரோடு (வட்ட கழக செயலாளர் நா.நெப்போலியன் 9884710753 )

நாள் 7.4.25 திங்கட்கிழமை 47 ஆம் நாள் எழும்பூர் தெற்கு பகுதி இடம்: 1) வட்டம் 61 சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை தமிழ் சாலை

(வட்ட கழக செயலாளர் S. டால்பின் ஹரி 9444170 744)

2) வட்டம் 61 அ ட்ரான்ஸ் போர்ட் லைன் குடிசை பகுதி புதுப்பேட்டை (வட்ட கழக செயலாளர் இ.மொய்தீன் 741840 1961)

நாள் 8.4.25 செவ்வாய்க்கிழமை 48 ஆம் நாள் திரு.வி.க நகர் தெற்கு பகுதி இடம்: 1) வட்டம் 75 சிவகாமிபுரம் பராக்கா ரோடு (வட்ட கழக செயலாளர் வி.கே வெங்கடேசன் 9444116870) 2) வட்டம் 75 அ சின்னபாபு ஐந்தாவது தெரு சந்திப்பு நம்மாழ்வார் பேட்டை (பகுதி கழக செயலாளர் எம்.சாமி கண்ணு 7708548588)

நாள் 9.4.25 புதன்கிழமை 49 ஆம் நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி இடம்: 1) வட்டம் 97 பெரியார் சாலை குடிசை மற்றும் வாரியம் குடியிருப்பு (வட்ட கழக செயலாளர் விக்னேஷ் சீனிவாசன் 9600046688) 2) வட்டம் 97 அ சீதா தோப்பு சபாபதி தெரு சந்திப்பு (வட்ட கழக செயலாளர் ஆ.மனோகரன் 9840259441)

நாள் 10.4.25 வியாழக்கிழமை 50ஆம் நாள் கொளத்தூர் மேற்கு பகுதி இடம்: 1) வட்டம் 69 அ செங்கல்வராயன் தெரு அகரம் (வட்ட கழக செயலாளர் ப. அதிபதி 9941851922) 2) வட்டம் 69 முத்துக்குமரப்பா தெரு ஜி கே எம் காலனி (வட்ட கழக செயலாளர் எம்.ஜே.சி பாபு 9884298070)

நாள் 11.4.25 வெள்ளிக்கிழமை 51ஆம் நாள் துறைமுகம் கிழக்கு தொகுதி இடம்: 1) வட்டம் 55 ஆ ஆச்சாரப்பன் தெரு, ஏழு கிணறு (வட்ட கழக செயலாளர் R.A அஸ்லாம் 94443 84330)

2) துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 57 அண்ணா பிள்ளை தெரு டேவிட்சன் தெரு (வட்ட கழக செயலாளர் பா. அண்ணா துரை 8610022779)

நாள் 12.4.25 சனிக்கிழமை 52 ஆம் நாள் அம்பத்தூர் வடக்கு பகுதி இடம்: 1) வட்டம் 79 எ.கே நகர். கோவில் தெரு ,எ. கே நகர் ஓரகடம் அம்பத்தூர்

2.காந்தி நகர் சுகாதார நிலையம் அருகில், காந்தி நெடுஞ்சாலை, காந்தி நகர் அம்பத்தூர் (வட்ட கழக செயலாளர் V.ரவீந்திரன் )

நாள் 13.4.25 ஞாயிற்றுக்கிழமை 53ஆம் நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி இடம்: 1) வட்டம் 82 அன்னை வயலட் காலேஜ் அருகில் (வட்ட கழக செயலாளர் E. ராமு 984156 6334 ) 2) வட்டம் 83 ஆ மாதனாங் குப்பம் கலெக்டர் நகர் (வட்டத் துணைச் செயலாளர் ஈர.முருகன் 789994554)

நாள் 14.4.25 திங்கட்கிழமை 54 ஆம் நாள்

அம்பத்தூர் தெற்கு பகுதி

இடம்: 1) வட்டம் 93 வண்டி அம்மன் கோவில் தெரு, (வட்ட கழக செயலாளர் இரா. டீக்கா 8681900093)

2) வட்டம் 90 அன்னை பிளாட்ஸ் அருகில் பாடி குப்பம் ரோடு (வட்ட கழக செயலாளர் நா. நெப்போலியன் 9884710753)

நாள் 15.4.25 செவ்வாய்க்கிழமை 55 ஆம் நாள் திரு.வி.க வடக்கு பகுதி இடம்: 1) 74வது வட்டம் சந்தியப்பன் பிரதான சாலை அயனாவரம் (வட்ட கழக செயலாளர் எஸ். புஷ்பராஜ் 9940456715)

2) 72 வது வட்டம் வெங்கடேசபுரம் பிரதான சாலை (அம்பேத்கர் சிலை அருகில்) கன்னிகாபுரம் (வட்ட கழக செயலாளர் M.A. டீக்கா 9941853951)

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, S.முரளி, R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P. விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் தலைமையில்

# சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் நலஉதவிகள் - பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு நலஉதவிகள் வழங்குகிறார் - ராஜீவ்காந்தி சிறப்புரை!

சென்னை, மார்ச் 31 -

சென்னை மேற்கு மாவட்ட திமுக வழக்கறிஞர்கள் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 272 வழக்கறிஞர்களுக்கு சீருடைகள் புத்தகங்கள் மற்றும் 572 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (31-03-2025 திங்கட்கிழமை) மாலை 5.00 மணிக்கு அமைந்தகரை பெருமாள் கோவில் தெருவில், மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் திரு ந.ராமலிங்கம். எம். சி, தலைமை கழக வழக்கறிஞர் கே. ஜே. சரவணன், பெ. ரகு, சி. சியாமளா, பாலச்சந்தர், வி .எம். சிவா மற்றும் தெ.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ரகுராமன், வி என் ஆர் பாபு, தி.மதனகோபால், ஜே. வி. ரவிவர்மன், அண்ணா நகர் தெற்கு பகுதி வட்டச் செயலாளர்கள், நா. அதியமான், ரா. பொன்னுயங்கம், பா. மகேஷ் ராஜா, ரவீந்திர குமார், வழக்கறிஞர் அணியின் பகுதி அமைப்பாளர்கள், அர்ஜுனன், வி. எம். நாகராஜ், கே. வெங்கடேசன், பி. சுரேஷ், எஸ். சந்திரநாதன், மணிகண்டன் ஆகியோர் வரவேற்கிறார்.

மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு. உதவிகளை வழங்குகிறார். மாநில மாணவர் அணி செயலாளர் ராஜீவ் காந்தி, டெக்சன் ரோமியோ மற்றும் மாநில சட்டத்துறை செயலாளர், என். ஆர். இளங்கோ மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன், எம். கே. மோகன் எம்.எல்.ஏ.; நா. எழிலன் எம். எல்.ஏ., மாநில தகவல் தொழில்நுட்ப அணி கார்த்திக் மோகன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற இருக்கின்றனர்

இதில் பகுதி செயலாளர் பரமசிவம், ஏ. ஆர். பி. எம். காமராஜ், மா.பா. அன்புதுரை, எஸ். மதன்மோகன், வினோத் வேலாயுதம், எஸ். சேரன், கே. ரவிச்சந்திரன், விஜயகுமாரி, டாக்டர் சந்திரபாபு, எஸ். ராம்குமார், எம் டி ஆர். நாதன், வி. எஸ். ராஜ், வி.பி. மணி, இறையன்பு குத்தூஸ், எல். எம். கே. அண்ணாதுரை, ஏ. டி. முருகன், கராத்தே எண். ஆனந்தன். டீ. ஜோஸ் டேனியல், ப. ராபர்ட், கமலா செழியன், ப.பிரகாஷ், துபாய் வி. ஆர். விஜய், யோகேஸ்வரி சுந்தரேசன், அசோக் குமார், லதா டிபிளாரன்ஸ், டாக்டர் ஜீவகன் அய்யாநாதன், அரவிந்த் குமார், திருமலை பொன்னுரங்கம், ராஜா, சி கே ரங்கராஜன், சாரதி மணிமாறன், கே. ராஜராஜன், சரவணன், இம்ரான் ஆருண், கே குட்டி, பாலச்சந்தர், மோகன் வேல், கார்த்திக், ஓம் குமார், ஜெகதீசன், கமல்,

வட்டக் கழகச் செயலாளர்கள், அ. ஏகாம்பரம், கு. பாபு, க. கோவிந்தராஜ், சி.பி. திருமலை, பி. ஜெயசங்கர், கே அருண் கண்ணன்,

ஜெனா, என் பாபு, கே கமல், வி வினோத்குமார், எம். கோபு, டி. ஆர். ராஜகோபால், ஜி. சிவகுமார், எஸ். விஜயகுமார், ஜே. திவாகர், ஓம்பிரகாஷ், பா சவுந்தர்யா, எஸ் ராகுல், எஸ் நடேசமூர்த்தி, எஸ் சுரேந்திரன், எம். பிரபுதுரை, எஸ். ராஜ், பாண்டிமீனா, சதீஷ் குமார், விக்னேஷ், கார்த்திக், முத்துச்செல்வம், ஜெயவேல், துஷாந்தினி, மன்னார்சாமி, சங்கர் கணேஷ், பூங்குன்றன், வேல் முருகன், ஆர் சீனிவாசன், தர்மராஜ், அமர்நாத், தமிழ்ச்செல்வம், வெங்கடேசன், அகிலாராணி, ஜெயபிரகாஷ், பாலாஜி, வெங்கடேஷ், வினோத்குமார், ராஜேஷ், ஷாலினி சங்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். எஸ். கே. கமலக்கண்ணன், அன்பழகன், என் .வேலாயுதம் நன்றியுரை ஆற்றுகிறார்.



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் யோகேஸ்வரி சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு நல உதவிகள் வழங்கி உரையாற்றினார். எம் கே மோகன் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் ந ராமலிங்கம், வட்டச் செயலாளர் தே. கருணாநிதி, குமரி விஜயகுமார், ராணி ரவிச்சந்திரன், டாக்டர் யாழினி, வி.எஸ். கலை, சங்கீதா, மற்றும் வட்ட கழக செயலாளர்கள் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கழக முன்னணியினர் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் வாரணவாசி ஊராட்சியில்.100நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் நிதி வழங்காத ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்,ஒன்றிய செயலாளர் .பி.சேகர் தலைமையில் நடைபெற்றது. உடன் பேரூர் செயலாளர் என். பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி. சஞ்சய் காந்தி, ஒன்றிய கழக நிர்வாகிகள் .ஜி சுந்தரமூர்த்தி, ஆர் குப்புசாமி, கே. விக்டர், செல்வகுமார், எம் சண்முகம், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் வி. குமரன்.தியாகராஜன் லோ .ரமேஷ். கார்த்திக் குமார். ராஜ் பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.